சார்பு நீதிமன்றம், குளித்தலை

HMOP.NO. 75 / 2017

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 22.07.2022 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

பெயர் : தர்மராஜ்	கிராமம் :
த/பெ : விஸ்வலிங்கம்	வட்டம் :
மதம் :	தொழில் :
ஜாதி :	வயது :

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். ஆதார் அடையாள அட்டை நகல் - ம.சா.ஆ.6 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

மனுதாரர் பாஸ்கரர் எனது சமூகத்தை சேர்ந்தவர். எனது நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குதெரியும். கரூர் சுங்ககேட் பகுதியில் எதிர்மனுதாரர் வேறு ஒரு நபருடன் கள்ளத்தொடர்பில் இருந்தது பற்றி எனக்கு பிறர் சொல்லி தெரியும். அதுபோல எதுவும் இல்லை என்னிடம் பொய்யான தகவலை பிறர் சொல்லியுள்ளார்கள் என்றால்சரியல்ல. எதிர்மனுதாரர் தானாக பிரிந்து வாழவில்லை என்றும், மனுதாரர் தான் எதிர்மனுதாரரை சரிவர பராமரிக்காமல் விரட்டிவிட்டார் என்றால்சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போதும் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால்சரியல்ல. எதிர்மனுதாரர் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் தனது மகனுடன் வசித்து வருகிறார் என்றும், மனுதாரர் எந்தவிதமான உதவியும் செய்யவில்லை என்று சொன்னால்சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால்சரியல்ல.

ஒம்/ தர்மராஜ்

M SHUNMUGA KANI

Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.07.26 11:18:05 +0530

சார்பு நீதிபதி,

குளித்தலை.